REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 21உ திங்கள் (6—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 22உ செவ்வாய் (7—12—54) [இதழ் 150

## ராஜிநாமாச் செய்யமாட்டார்!

டில்லி, டிச. 5—

இந்தியப் பேரரசின் தொழிற்கொள்கை குறித்து, மந்திரி சபையினரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் திருப்திகரமாகச் சரிக்கட்டப்பட்டுவிட்டனவாம்.

இந்தக் கருத்துவேறுபாடுகள் குறித்து பிரதமர் நேருவுக்கு தொழில் வர்த்தக இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி எழுதிய கடிதத்தில், தாம் பதவியிலிருந்து விலகிக்கொள்ள விரும்புவதாக எழுதியிருந்தாரல்லவா? இப்போது அவர் தமது பதவியை விட்டு விலகமாட்டார் என நம்பகமாகத் தெரிகிறது என டில்லிச் செய்திகள் கூறுகின்றன.

# மதிப்பு குறையுமென நினையாதீர்!

## வேலை நிறுத்தம் கூடாதாம்!

### பாங்கி ஊழியர்களை டில்லி எச்சரிக்கிறது!

*இந்திய மந்திரிசபையின் கூட்டமொன்றுக்குப் பின்னர், பாங்கி ஊழியர்களை எச்சரித்து, பத்திரிகை குறிப்பொன்றை, இந்திய சர்க்கார் வெளியிட்டிருக்கிறது.*

டிசம்பர் 10-ந் தேதியன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என்ற முடிவை மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும், வேலை நிறுத்தம் செய்வது பாங்கி ஊழியர்களின் நலனுக்கும், நாட்டின் நன்மைக்கும் பாதகமானதென்றும் அந்த குறிப்பு எச்சரிக்கிறது.

தற்போது நடைபெற இருக்கும் வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதென்றும், நாட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்படுவதைச் சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்றும், நிலைமையைச் சமாளிக்க எல்லா நடவடிக்கைகளையும் தான் மேற்கொள்ளப்போவதாகவும் இந்திய சர்க்கார் பாங்கி ஊழியர்களை எச்சரித்திருக்கிறது.

(சட்டப்படி, சட்டவிரோதமான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோருக்கு சுமார் ஒரு மாத சிறைத் தண்டனையும், ரூ. 50 அபராதமும் விதிக்கப்படுமென்று தெரிகிறது. சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தைத் தூண்டுவோருக்கும், வேலை நிறுத்தக்காரர்களுக்கு பொருளாதார உதவி அளிப்போருக்கும் தண்டனை உண்டு. தொழில் தகராறு சட்டப்படி,இத்தண்டனைகள் அளிக்கப்படலாம். சர்க்கார், மாகாண மாஜிஸ்திரேட்டிடமோ, அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டிடமோ இச்சட்டத்தின்படி குற்றம் செய்வோரைக் கைது செய்ய தீர்ப்பு ஒன்றைப் பெற வேண்டுமென்று தெரிகிறது.)

## மாண்புடன் நடந்து வேலை நிறுத்தத்தைத் தவிர்க்கவும்

### பாங்கி ஊழியர் நிலையில் நெருக்கடி

### நேரு சர்க்காருக்கு மக்கள் சபை உறுப்பினர்கள் வேண்டுகோள்

#### சமரசம் சாத்தியமில்லை என ஊழியர் தலைவர் அறிவிப்பு

"பாங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தவிர்க்கவேண்டுமென்று பாங்கி அதிபர்கள் விரும்புகிறார்கள்; அப்பீல் மன்றத்தின் தீர்ப்புக்கு முன்னிருந்த நிலைமையே நீடிக்கவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள்; ஆகவே, 'நல்ல பாதையை நோக்கிச் செல்கிறோம்' என்ற முறையில், சர்க்காரிடமிருந்து அறிகுறிகள் காணப்பட்டால், நெருக்கடியான இச்சமயத்திலும் கூட நமது பொருளாதாரத்தின் முக்கியப் பகுதியான தொழில் அமைதியை ஏற்படுத்த இயலும்; எனவே, இந்திய சர்க்கார், 'தன்னுடைய மதிப்பு குறைந்து போகுமே' என்று கருதாது, நல்லெண்ணத்துடன் நடந்துகொண்டு, பாங்கி அப்பீல் தீர்ப்பை அமுல் நடத்துமுன்னர் இருந்த நிலைமை நீடிக்கவேண்டும்,"

*—என்று இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதின்மூன்று பேர் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றில் இந்திய சர்க்காரை வற்புறுத்தியுள்ளனர். மேலும், அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—*

"பாங்கி ஊழியர்களுக்கு இந்திய சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கையில் காணப்படும் வார்த்தைகள், நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் காணப்படுகிறது. 'வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்ற முடிவைப் பற்றிப் புனராலோசனை செய்யலாம்,' என்று பாங்கி ஊழியர்கள் மனதில் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்துமளவுக்கு சர்க்காரின் அறிக்கை இல்லை. இந்த வேலை நிறுத்தம் கம்யூனிஸ்டுகளால் தூண்டப்பட்டது என்று பிரதம மந்திரி குற்றம் சாட்டியது, இந்த நிலைமையை எந்த வழியிலும் முன்னேற்றவில்லை; அவரது தாக்குதல், உண்மைக்குப் புறம்பானது," *என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.*

*இந்த அறிக்கையில், தோழர்கள் ஆச்சார்ய கிருபளானி, ஏ. கே. கோபாலன், என். சி. சாட்டர்ஜி, அசோக்மேத்தா, ஹிரன் முக்கர்ஜி, லங்கா சுந்தரம், எஸ். எஸ். மூர், ராமச்சந்திர ரெட்டி, ஜெயசூர்யா, திரிதிப்குமார்-செளதிரி, ஏ. கிருஷ்ணசாமி, திருமதிகள் சுசேதா கிருபளானி, ரேணு சக்ரவர்த்தி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.*

*இந்திய சர்க்கார் ஆரம்பம் முதலே இப்பிரச்சினையில் சரிவர நடந்து கொள்ளவில்லை என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.*

*இப்போதுள்ள சர்க்காரின் முடிவு, உண்மையின் அடிப்படையில் எடுக்கப் பட்டது அல்ல; நீதி தி ராஜாத்தியட்சா நியமிக்கப்பட்டதே, பாங்கி அப்பீல் மன்றத்தின் தீர்ப்பு சரியில்லை என்பதைக் காட்டுகிறது. அப்படியிருக்க, சர்க்கார் அவசரப்பட்டு அப்பீல் மன்றத் தீர்ப்பை மாற்றி அமுல் நடத்தியது சரியல்ல,"*

*என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.*

*ஆகவே, நிலைமையைச் சமாளித்து வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க சர்க்கார் பழைய நிலைக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்றும், தாங்கள் கூறுகிற யோசனையை ஏற்றுக்கொள்வதில் சர்க்கார் தன் கெளரவம் குறைந்துவிடுமென்று கருதுவது கூடாதென்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கை மேலும் கூறுகிறது.*

## மேலும் 'ஐவர்' பதவி பெறுகின்றனர்

*இந்திய சர்க்காரில், மேலும் ஐந்து மந்திரிகளை புதிதாக ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் நியமித்துள்ளார்.*

*புதியதாக நியமிக்கப்பட்ட மந்திரிகள்:—*

*டாக்டர் சையத் முகமது, ஹரி விநாயகப் படஸ்கர், கேசவ தேவ மாளவியா, மணிலால் சதுர்பாய் ஷா, அருண் சந்திர குஹா ஆகியோராவர்.*

*இவ்வைந்து பேரும் ராஜாங்க மந்திரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கட்கு, மந்திரி சபையில் 'ஓட்' செய்யும் உரிமை கிடையாது.*

*இவர்களில் படஸ்கர் என்பவர் தவிர மற்ற நால்வரும் ஏற்கனவே துணை மந்திரிகளாயிருந்தவர்கள்தான். அதிலும், டாக்டர் சையத் முகமது என்பவர் பீஹார் மாநிலத்தில் இரண்டு தடவைகள் மந்திரி பதவி வகித்தவராவார்.*

## "தவிர்க்க முடியாதது"

**ஊழியர் கழகத் தலைவர் அறிக்கை**

***"பாங்கி ஊழியர்களின் நிலைபற்றி இந்திய சர்க்கார் அண்மையில் விடுத்திருக்கும் பத்திரிகைக் குறிப்பு, 'சர்க்காருக்கும்-பாங்கி ஊழியர்களுக்கும் இடையே சமரசம் ஏதும் சாத்தியமில்லை,' என்ற கருத்தைத்தான் புதரிவிக்கிறது"***

***என்று, அகில இந்திய பாங்கி ஊழியர்கள் கழகத் தலைவர் ஏ. கி. காகர் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.***

***'இந்திய சர்க்காரின் அறிக்கை நம்பிக்கை தருவதாக இல்லை," என்பது அவருடைய கருத்து.***

***காலவரையறையின்றி நடைபெற இருக்கும் வேலை நிறுத்தத்திற்கு தங்களைத் தயார் செய்து கொள்ளுமாறு 65,000 ஊழியர்களை அவர் கேட்டுக்கொண்டார்.***

***"பாங்கி ஊழியர்கள் வெற்றி பெற்றால், அது, தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றியாகும்; தொழிலாளர் நலனுக்கு விரோதமான கொள்கையை அமுல் நடத்தும் சர்க்கார், அதன் கொள்கையை எதிர்த்துப் போராடும் அமைப்பினை அடக்க முயற்சி செய்கிறது; பாங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம் எவ்விதத்தில் சட்ட விரோதமானதாகும் என்று எனக்குப் புரியவில்லை,"***

***என்று அவர் மேலும் தனது அறிக்கையில் குறிப்பிடுகிறார்.***

## நாகர்கள் ஆர்ப்பாட்டம்!

### 150 பேர் கைது செய்யப்பட்டனர்

*கலைக்கப்பட்ட சட்டசபையை அங்கீகரிக்க கோரிக்கை*

இம்பால், டிச. 4—

இங்குள்ள அரசாங்க ஆலோசகர் அலுவலகத்தின் முன் சுமார் 150 நாகர்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினரென செய்தி வெளியாகியுள்ளது.

அவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனராம்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவைக் கலைத்துவிட வேண்டுமெனவும், கலைக்கப்பட்ட மாநில சட்டசபையை மீண்டும் அங்கீகரிக்க வேண்டுமெனவும் கோரினர் எனத் தெரிகிறது.

நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் இப்போதுள்ள நியமன ஆலோசனைக்குழுவில் பங்குபெற்றுள்ள இரண்டு பழங்குடி அங்கத்தினர்களும் உடனடியாக ராஜிநாமாச் செய்ய வேண்டுமெனக் கோரப்பட்டதாகவும் தெரிகிறது.

### தேவையாம்!

*முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள்ளாக இந்திய ரயில்வேக்களுக்கு, சுமார் 2,50,000 வாகனங்கள் (நான்கு சக்கரங்களுடன் கூடியவை) தேவையாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.*

**மதுரை சம்பவம்:**

## 'கலவரம் செய்யும் நோக்குடனே கொட்டகைமுன் கூடினர்'

### இன்ஸ்பெக்டர்-ஜெனரலிடம் தி.மு. கழக செயலாளர் முத்து விளக்கம்

*மதுரை, டிச. 4—*

*இத்திங்கள் இரண்டாம் தேதியன்று மதுரையில் தோழர் எம். ஆர். இராதா அவர்கள் நடத்திய 'இராமாயண' நாடகத்தை ஒட்டி, மதுரை இந்து மகா சபையினரும், மற்றோரும் நாடகக் கொட்டகை முன்னர் கலவரம் செய்ததுபற்றி சென்னை போலீஸ்-இன்ஸ்பெக்டர் ஜெனரல் வி. ஆர். இராஜரத்தினம், இலாகா பூர்வமான விசாரணை நடத்திவருகிறார்.*

*இந்து மகா சபையினர், மதுரை காங்கிரஸ் கட்சியினர் ஆகியோர் இன்ஸ்பெக்டர்-ஜெனரலைச் சந்தித்தனர்.*

*மதுரை கலெக்டர், நகர மாஜிஸ்திரேட் ஆகியோரும் இன்ஸ்பெக்டர்-ஜெனரலைச் சந்தித்தனர்.*

*மதுரை நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் எஸ் முத்து அவர்களும் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலைச் சந்தித்தார்.*

**"நாடகக் கொட்டகைமுன் கலவரம் நடத்தப்பட்டதற்கு முன்பே நகரின் மற்றப் பகுதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டனர்,"**

***என்று, தோழர் முத்து தெரிவித்தார்.***

**"கலவரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடகக் கொட்டகைக்கு முன்பு கூடினர்,"**

***என்று, அவர் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலிடம் விளக்கமாகக் கூறினார்.***

***மதுரை வைத்தியநாதய்யர் மகன் வி. சங்கரனும் இன்ஸ்பெக்டர்-ஜெனரலைச் சந்தித்தார்.***

***இந்தியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில், நிலக்கரி உற்பத்தி, 1954 செப்டம்பரில் 31,77,578 டன்னாக இருந்தது. 1954 அக்டோபரில் 29,21,302 டன்னாகக் குறைந்துவிட்டது.***

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 6—12—1954 திங்கள்

# நேர்த்தியானவர்!

இரு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியத் துணைக் கண்டத்தில் வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில், அங்கு வாழும் காட்டு மக்களிடையே குழப்பம் நிகழ்ந்தது. அதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அது பற்றி விளக்கம் கேட்டார், ஒரு உறுப்பினர் மக்கள் சபையில். அதற்கு பதில் கூறும்பொழுது, வடகிழக்கு எல்லைப்புறத்தை அடுத்திருக்கும் பர்மா பகுதியில் உள்ள காட்டு ஜாதியினர், இந்திய எல்லைக்குள் புகுந்து இங்குள்ள 92 காட்டு ஜாதியினரின் தலைகளைக் கொய்த பயங்கரமான சோக வரலாற்றைக் குறிப்பிட்டார் பிரதமர் நேரு. அவர் கூறியது இது:—

“2½ வருஷங்களுக்கு முன்பு இந்தியா பக்கத்திலுள்ள ஒரு கிராமத்திற்தும், பர்மா எல்லைக்குளுள்ள ஒரு கிராமத்திற்கும் சண்டை நடந்தது. பர்மா பக்கத்திய கிராமத்தினர் இந்திய எல்லையிலுள்ள கிராமத்திற்கு வந்து 92 பேர் தலையை வெட்டி எடுத்துக்கோண்டு போய் விட்டார்கள். இது பற்றி பர்மா இந்தியா அதிகாரிகள் சேர்ந்து நடவடிக்கை எடுத்துக்கோண்டனர்.

“பர்மியப்பிரதமருடன் நான் எல்லைப்புறத்தில் பிரயாணம் செய்தபோது, இந்திய கிராமத்தைத் தாக்கிய பர்மிய கிராமத் தலைவர், தான், எப்படி 92 பேர் தலையை வெட்ட முடிந்ததென்பதை விளக்கினார். அவர் மிக்க விவரமாக வர்ணித்ததை நான் மொழிபெயர்ப்பாளர் மூலம் கேட்டறிந்தேன். அவர் மிக்க திருப்தி அடைந்திருந்தார். அவர், தலை வெட்டுவதைத் தடுக்கும் அதிகாரவர்க்க ஏற்பாடுகளைக் குறித்து வருந்தினார்.”

அம்மலை ஜாதியினர் தலைவன், பழி வாங்கும் எண்ணத்துடன் படுகொலை செய்திருக்கிறான். ஒருவரல்ல, இருவரல்ல, 92 நபர்களின் தலைகளை, அந்த ‘நாசகாலன்’ துண்டித்து இருக்கிறான். இரக்கமென்ற பொருளிலா அரக்கனாக, அக்காட்டுவாசிகள் தலைவன் இருந்திருக்கிறான்.

ஏதோ அவனுக்கிருந்த பழி முடிக்க வேண்டுமென்கிற வெறி உணர்ச்சி, அவனை 92 நபர்களின் உயிர்களைக் குடிக்க வைத்தது; ஆனால், அவ்வுணர்ச்சியின் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர், தான் புரிந்த கொலைகளுக்காக அவன் உண்மையில் வருந்துவான் என்று, அவன் போக்கிற்கு நாம் இரங்குவோமென்றாலோ, அதற்குத் துளியும் இடமில்லை. பல உயிர்களை அவன் நாசமாக்கிவிட்டு, அதற்காக பின்னர் அவன் வருந்தாததோடு மட்டுமல்லாமல், தான் செய்த கொலைகளுக்காக மகிழ்ந்து, அம்மகிழ்ச்சி தெரிய பிறரிடம், அவ்வக்கிரமத்தைக் கூறவும் துணிகிறான்.

நீதிமன்றத்துக்கு முன்னால் தலைகவிழ்ந்து நின்று, ‘கொலை செய்ததுண்டா?’ எனக் கிளம்பும் கேள்விக்கு, ‘ஆம்! கொலை செய்துள்ளேன்’ என்று நாத்தடுமாறக் கூறுகிறானே கொலைஞன், அத்தன்மையில் இல்லை, 92 நபர்களின் உயிர்களைக் குடித்து உலாவும் அக்கொடியவன் கூறிய விளக்கம். செய்த கொடுங் குற்றங்களைப் பூரிப்புடனும் பெருமிதத்துடனும் பகர்கிறான், மலை ஜாதியினரின் பண்பற்ற தலைவன்.

அதுமட்டுமா?

ஆற்றிய கொடுவினைக்காக மகிழ்ந்து, அம்மகிழ்ச்சியை ஆர்வத்தோடு உரைத்த அளவில் நில்லாது, தலைகளைச் சீவிடும் தன் தொழிலைத் தடுக்கக் குறுக்கிடும் அரசாங்கப் போக்கையும் வெறுக்கிறான்—கண்டிக்கிறான்!

மலை ஜாதியினரின் இன்றையப் பண்பாட்டிற்கு, சொந்த மரபைச் சேர்ந்த 92 நபர்களின் தலைகளை, உடல்களை விட்டு வேருக்கின அவர்கள் தலைவனின் செயல் ஒரு எடுத்துக்காட்டு!

அவர்களுடைய பண்பாடு, கொலை செய்வதை மறம் எனக் கூறிடவில்லை; வெட்கப்படவோ, வேதனை கொள்ளவோ, துக்கப்படவோ செய்வதாகவும் இல்லை. மனித நாகரிகத் துவக்கத்தின் அடிமட்டத்திலே உள்ளனர் அம்மலை ஜாதியினர்.

அவர்கள் கொடுஞ் செயலை, பழக்கவழக்கங்களை, நாகரிக மனிதன் ஒப்பான். அவர்கள் நிலை கண்டு பரிதாபங்கொள்ளவும், அவர்களை மாக்கள் நிலையிலிருந்து மக்கள் நிலைக்கு மாற்றவுமே அறிவுடையோன் முயலுவான். அதை விடுத்து, அவர்கள் நேர்த்தியானவர்களென்றோ, அவர்களை விரும்புகிறேன் என்றோ எவரும் கூற முன்வரார். இவ்வாறு, கட்போதையில் இருப்போரும் கழறார்—மதி குறைந்தோரும் மொழியார்!

ஆனால், இந்தியப் பேரரசின் பிரதமரான பண்டிதரோ, அவர்களை, நேர்த்தியானவர்கள் என்றும், விருப்பத்திற்குரியவர்கள் என்றும் புகல்கிறார். அது, இது:—

**“நான் அவர்களது செயலை அங்கீகரிக்காமல் கண்டித்த போதிலும், அவர்களை நான் விரும்புகிறேன்; அவர்களை நேர்த்தியானவர்கள் எனக் கருதுகிறேன்.”**

மலைஜாதியினரின் கொலைத் தொழில், அவர்களுடைய பண்பற்றப் போக்கையும், நாகரிகத்தை இன்னமும் நெருங்காத காட்டுக் குணத்தையும் காட்டுவதாக இருக்கிறது. இத்திருக்கல்யாண குணம் படைத்த மலைஜாதியினரை, பிரதமர், நேர்த்தியானவர்களெனச் சித்தரிக்கிறார்! அவர்களை விரும்புகிறேன் எனவும் விள்ளுகிறார்!

அவருடைய பரந்த நோக்கையும், விரிந்த போக்கையும் பாரீர் ஜெகத்தீரே—என்பர், அவருடைய பக்தகோடிகள்! இருந்தாலும், அதை ஒப்பாது அறிவுலகம்.

92 நபர்களின் தலைகளைக் கொய்து நரவேட்டையாடும் அந்த நலமற்றவர்களிடம், பண்டிதர் கண்ட நேர்த்தி என்னவோ நாம் அறியோம். மனித வேட்டையிலீடுபடும் காட்டுமிராண்டிகளிடம் உள்ள நேர்த்தியை நாம் புரிந்து கொள்ள முடியவில்லையானாலும், அவர்களிடத்தில் நேர்த்தியைக் காணும் பண்டிதரின் நேர்த்தியை மட்டும் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

நிற்க,

சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் துவக்கத்தில், சென்னைக்கு ‘திக்விஜயம்’ செய்தார் பண்டிதர். அப்பொழுது, அதற்கு முன்பு திராவிடர்களைப் பார்த்து அவர் குளறி வழிந்த ‘முட்டாள்தனம்’ என்ற சுடுசொல்லுக்கு ஆற்றாது துடித்துக் கொண்டிருந்த திராவிடர் பலர், அவருக்கு நல்லறிவு கொளுத்த, நாகரிகமான முறையில், அவர் ஒப்புதலுடன் உருவாக்கப்பட்ட சட்டத்திற்குட்பட்டு, அவருக்கு மூன்பாக மிக மிக அமைதியுடன் கருப்புக் கொடி காட்டினர். கருப்புக் கொடி கண்ட பண்டிதர் என்ன செய்தார்?

கொலைத் தொழிலை மனமொப்பிச் செய்துவரும் காட்டுமிராண்டிகளான மலைஜாதியினரை, ‘நேர்த்தியானவர்கள்’ எனக் கூசாமல் கூறிடும் அதே பிரதமர் நேருதான், சட்டத்திற்குட்பட்டு, நாகரிகமான முறையில், தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொண்டவர்கள் மீது, சர்ப்பமெனச் சீறினார்-பாம்பெனப் படமெடுத்தாடினார்!

மனித வேட்டையாடும் மலை ஜாதியினரை தன் விருப்பத்துக்குரியவராகக் கட்டியணைக்கும் அதே பண்டிதர்தான், ஏசினாலும், தடிகொண்டு தாக்கினாலும் தாங்கிக்கொண்டு, பொறுமையுடனும் பொறுப்புடனும், கருப்புக் கொடி காட்டிய கண்ணியமுள்ள திராவிடர்களைக், காட்டுமிராண்டிகள் எனக் கனல் கக்கக் கூவினார்!

நாகரிகமிக்க நல்லவர்களை, துன்பங் களைய பிறருக்குக் கேடு சூழக்கூடாது எனும் பெருநெறியைப் பின்பற்றுகிற பெருங்குடி மக்களை, மானங் காக்க இமயத்தில் புலிக் கொடி பொறித்துப் புகழ் பரப்பிய போர்க்குடி வந்த வீரத் தமிழர்களை, புலிக் குணம் படைத்த மலைஜாதியினரை ‘நேர்த்தியானவர்’ எனச் செப்பிடும் செந்நாப் புலவர், ‘காட்டுமிராண்டிகள்’ எனக் கர்ஜித்தார்!

அத்துடனும் நின்றாரில்லை, உலக வரலாற்றுச் சுவடி ஆசிரியர்! மேலும் உயர்ந்தார்; கனியிருக்கக் காய் கவரும் குணம் பெற்றுள்ள அவர், தான் கற்ற ஆங்கிலத்தில் உள்ளக் கடுஞ்சொற்கள் சிலவற்றையும், நம்மவர் மீது வீசினார்!

• நரவேட்டையாடும் மலை ஜாதியினரிலும் உலகுக்கே நாகரிகம் போதித்த நம் நற்றமிழர் கூட்டத்தை, அம்மலை ஜாதியினருடனும் ஒப்பிடக் கூடாது; அது பொருந்தாது; அதிலும் ‘இழிந்தவர்கள்’ எனவும் பண்டிதர் இடிமுழக்கம் செய்தார்!

திராவிடர்கள் கொலை செய்யும் கொடுந்தொழில் புரியவில்லை! கொலை செய்துவிட்டு, அவரிடம் அதை ஆர்வத்துடன் கூற, பண்டிதரை திராவிடர் அணுகவில்லை! அவர் ஏசிய சுடுசொல், தம் இருதயத்தைத் துளைத்திருப்பதை அவர் காணச் செய்யவே திராவிடர் அவருக்குக் கருப்புக்கொடி வரிசை வைத்தனர். அதற்காகவே, பண்டிதர் பாம்பெனப் படமெடுத்தாடினார்; ஆட்சியில் அன்றிருந்த ஆச்சாரியாரையும் ‘அழித்திடுக இக்கடைகெட்டவர்களை’ எனக் கட்டளையும் பிறப்பித்தார்; திராவிடரை இழித்துரைப்பதின் மூலம் தனது ‘காட்டுக் குண’த்தையும் காட்டிக் கொண்டார்!

குணங் கெட்டக் கொலைஞர்கள், ‘நேர்த்தியானவர்கள்’!

நாகரிகமற்ற நர வேட்டையினர், ‘நேர்த்தியானவர்கள்’!

மூவேந்தர் மரபில் வந்த வீர மரபினர், ‘காட்டுமிராண்டிகள்’!—இல்லை—அவர்களிலும் ‘கடை கெட்டவர்கள்’!

வடநாட்டு அரசனின் வாய்த் துடுக்கை அடக்க, அவன் தலையில் கருங்கற் பாறையை ஏற்றித் தாய்நாட்டிற்கு ஓட்டி வந்த வரலாறு கொண்டவர்கள் ‘காட்டுமிராண்டிகள்’!—அல்ல அல்ல—‘இழி மக்கள்’!

விந்தையான மனிதரின் நிந்தைமிகு விசித்திர சித்தாந்தம்! நம்போன்ற சாமானியர்களால் புரிந்துகொள்ள முடியாதது!

பண்டிதரின் நேர்த்தியே நேர்த்தி!

# தேர்ந்தெடுத்தோரை திருப்பி அழைக்கும் மசோதா

## மக்கள் சபையில் தனிப்பட்டோர் முயற்சி

புதுடில்லி, டிச. 3—

இந்தியப் பாராளுமன்றத்திற்கும், ராஜ்ய சட்டசபைகளுக்கும், வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை அந்தத் தொகுதியில் உள்ள வாக்காளர்கள் விரும்பினால் திருப்பி அழைத்துக் கோள்ளலாம் என்று இந்திய அரசியல் சட்டத்திற்கு திருத்த மசோதா ஒன்று மக்கள் சபையில் பிரரேபிக்கப்பட்டது.

இந்த மசோதாவை மேற்கு வங்க ‘பார்வர்டு பிளாக்’ உறுப்பினரான சத்தியப்பிரிய பானர்ஜி என்பவர் பிரரேபித்திருக்கிறார்.

சர்க்கார் சார்பில் பார்லிமெண்டரி அமைச்சர் சத்தியநாராயண் சின்ஹா, தான், மசோதா பிரரேபிக்கப்படுவதை எதிர்க்கவில்லை என்றாலும், அடுத்த கட்டங்களில் சர்க்கார் இந்த மசோதாவை எதிர்க்கும் என்றும் கூறியுள்ளார்.

இந்த மசோதாவின் நோக்கம் பற்றி எழுதப்பட்டுள்ள குறிப்பில், இதுபோன்ற வாய்ப்பு, முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்திய அரசியல் சட்டத்தில் இதுபோன்ற வாய்ப்புகள் கிடையாதென்றும், இந்த குறையைப் போக்கவே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# சட்டசபை உறுப்பினர் வெளியேற்றப்பட்டார்

## சபாநாயகர்மீது குற்றம் சாட்டினாராம்

லாகூர், டிச. 3—

மேற்கு பாகிஸ்தானை ஒரே நிர்வாகப் பகுதியாக்குவது பற்றி பஞ்சாப் சட்டசபையில் விவாதம் நடைபெறுகையில், ஒரு உறுப்பினர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். இந்த கூட்டத்தில் இனி அந்த உறுப்பினர் கலந்துகொள்ள இயலாதவாறு செய்யப்பட்டு விட்டது.

மேற்கு பாகிஸ்தானை ஒரே பிரிவாக்க வேண்டுமென்ற மசோதாவின் விவாதத்தை சபைத் தலைவர் முடித்து விட்டாராம்.

இதை மாலிக் குலாம் நபி என்னும் எதிர்க் கட்சி உறுப்பினர் எதிர்த்து, சபைத் தலைவர் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு தங்கள் கருத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்றும், சபைத் தலைவர் ஒருதலைப் பட்சமாக நடந்துகொண்டார் என்றும் குற்றம் சாட்டினார் என்று தெரிகிறது.

சபைத் தலைவர் காலிபா சுஜாதீன், உறுப்பினர் தனது சொற்களை வாபஸ் பெறவேண்டுமென்று கூறினார்.

சர்க்கார் கட்சியினரும், இதை ஆதரித்து கோஷமிட்டார்களாம்.

உடனே மாலிக் குலாம் நபி சபைத் தலைவரைப் பார்த்து “நீங்கள் சர்க்காரைக் கண்டு பயப்படுகிறீர்கள்; நீங்கள் தலைவராக இருக்கும் இந்த இடத்தில் இருப்பதே இழுக்கு,” என்று கூறினாராம்.

உடனே சபைத் தலைவர் மாலிக் நபியை சபையிலிருந்து கட்டாயமாக வெளியேற்றுமாறு போலீசாருக்கு உத்தரவிட்டாராம்.

# மைசூர் சட்டசபையை கலைத்துவிடவும்!

## பாராளுமன்ற உறுப்பினர் குருபாதசாமி அறிக்கை!

### கட்சிப்பூசல் மலிந்துவிட்டது என்கிறார்

மைசூர் சட்டசபையைக் கலைக்க வேண்டுமென்றும், உடனடியாகப் புதிய தேர்தல்கள் நடத்தவேண்டுமென்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ் குருபாதசாமி அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறார்.

“கட்சியின் உறுப்பினர்களிடையே காணப்படும் கருத்து வேற்றுமையினாலோ, அல்லது கட்சியின் தலைமைப் பீடத்தில் ஊறிப்போயிருக்கும் பலவீனத்தினாலோ, மைசூர் சர்க்காரின் நிர்வாகம், குழப்பத்தின் எல்லையில் இருக்கிறது,”

என்று தனது அறிக்கையில் குருபாதசாமி கூறுகிறார்.

“காங்கிரசாரிடையே காணப்படும் கருத்துவேற்றுமையில் அதிகாரிகளும் தலையிட்டு, தாங்களும் கட்சி பேதத்துடன் காணப்படுகிறார்கள்; இதன் மூலமாக சர்க்கார், அரசியல் எதிரிகளின் குழப்பத்தில் சிக்கி விட்டது என்று நான் அறிகிறேன்,”

என்று அவரது அறிக்கை மேலும் கூறுகிறது.

“இந்த நிலைமைகள் காணப்பட்ட ‘பெப்சு’வில், முன்னர் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது. மைசூரில் நிலைமை மிகவும் மோசமடையாதிருப்பதற்குக் காரணம் இந்தியாவிற்கே வழிகாட்டும் முறையில் மைசூரில் நல்லதோர் நிர்வாக அமைப்பு சிறந்த நிர்வாகிகளினால் முற்காலத்தில் அமைக்கப்பட்டது,”

என்று குருபாதசாமியின் அறிக்கை மேலும் கூறுகிறது.

“கடந்த மூன்றாண்டு காலமாக மைசூரில் குறிப்பிடத் தகுந்த சட்டசபை நடவடிக்கைகள் ஏதும் கிடையாது என்றும், சர்க்கார்; தனது கட்சியில் காணப்பட்ட கருத்துவேற்றுமைகளை மறைக்க, வீண் பிரச்சாரத்தில் இறங்கியது,” என்றும், அவர் குறிப்பிடுகிறார்.

பரிசீலனை மாதத்தில், 824 நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை நடைபெற்றது. அவற்றில், நாளொன்றுக்குச் சராசரி 3,29,389 பேர் வேலை செய்தனர்.

# கொழும்பு தி. மு. கழக ஆண்டு விழா

## கண்கொள்ளாக் காட்சி; கருத்து மிகுந்த பேச்சு

## என்றும் கண்டிராத எழுச்சி

## கொழும்பில் இரா. நெடுஞ்செழியன் அலுவல்கள்

24—10—54-ம் நாள் ஞாயிறன்று நண்பகலில், இலங்கையின் பல பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்துவிட்டுக் கொழும்பு வந்து சேர்ந்த தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கொழும்பு 'கிரீன்லாண்ட்ஸ்' ஹோட்டலில் வந்து தங்கினார். கொழும்பு தமிழ்ச் சங்கப் பொதுச்செயலாளர் தோழர் வ. மு. கனகசுந்தரம் அவர்களும் பிறரும் வரவேற்றுச் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தனர்.

### தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் சங்க வரவேற்பு

கொழும்பு அரசினர் தமிழ்ச் சுருக்கெழுத்து — வட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளித் தலைமையாசிரியர் தோழர் இராமலிங்கம் அவர்களின் பெருமுயற்சியின் பேரில், தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் சங்கத்தின் சார்பில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு கிரீன்லாண்ட்ஸ் ஹோட்டலில் நண்பகல் விருந்தும், வரவேற்பும் சிறப்பான முறையில் அளிக்கப்பட்டது. விருந்திற்குத் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சிப் பள்ளி மாணவர்களும், பிற தமிழ் அன்பர்களும் வந்திருந்தனர்.

நல்விருந்து முடிந்த பின்னர், தமிழன்பர் ஒருவர் தலைமை தாங்க வரவேற்புக் கூட்டம் அதே இடத்தில் துவக்கப் பெற்றது. தோழர் இராமலிங்கம் அவர்கள் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தாம் தென்னாட்டில் சந்தித்த வரலாறு பற்றிக் கூறி, தோழர் நெடுஞ்செழியனைப் பலப்படப் பாராட்டிப் பேசினார். வரவேற்பு இதழ் ஒன்றும் அவரால் படித்தளிக்கப்பட்டது.

தோழர் இரா. நெடுஞ்செழியன் வரவேற்புக்கு விடை பகரும் முகத்தான் சிறிதுநேரம் பேசினார். நாகரிக வளர்ச்சியும், அரசியல் மேம்பாடும், நேரச் சிக்கனமும் ஏற்பட்டுள்ள இது நாட்களில், சுருக்கெழுத்தாளரின் தேவை எந்த அளவுக்கு எதிர்பார்க்கப்படுகிறது என்பது பற்றியும், அதுவும் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் மிகவாகத் தோன்ற வேண்டியது எவ்வளவு இன்றியமையாததாகும் என்பது பற்றியும், சுருக்கெழுத்தாளரின் கடமை என்ன என்பது பற்றியும் பேசினார். தோழர் இராமலிங்கம் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

### கொழும்பு தி. மு. க. ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்

மிக நல்ல முறையில் ஆர்வத்தோடும் எழுச்சியோடும் வளர்ந்திருக்கும் கொழும்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆண்டு விழாவை மிகச் சீரோடும் சிறப்போடும் 24—10—54ல் கொண்டாடுவதற்கான முறையில் கழகத் தோழர்கள் அரும்பாடுபட்டனர். பல நாட்களுக்கு முன்பிருந்தே ஆண்டு விழா நடைபெறுவது பற்றிய விளம்பரம் நல்ல முறையில் செய்யப்பட்டிருந்தது. கொழும்புத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களது பேச்சைக் கேட்டு மிக்கக்களிப்பெய்திய மக்களும், கேட்க வேண்டுமென்ற ஆவலோடு காத்திருந்த மக்களும் தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தை மிக்க ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்தனர்.

கூட்டம் நடைபெறுவதற்கு முன்னால், கழகக் கட்டிடத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மிகச் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தன. நண்பகல் ஒருமணியிலிருந்தே கழகத் தோழர்களும், பொது மக்களும் ஊர்வலம் துவக்கப்படும்இடத்திற்குச் சாரை சாரையாக வந்து குவியத் தொடங்கினர். கழகத் தோழர்கள் கழகக் கொடியிலைகளை அணிந்துகொண்டு அணிவகுத்து நின்றனர். நூற்றுக்கணக்கான தோழர்கள் கழகக் கொடிகளையும், கழகக் கருத்துக்கள் பொறித்த தட்டிகளையும் ஏந்திக்கொண்டு, ஊர்வலத்தின் முன் வரிசையில், கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும் இருவரிசையாக நின்றனர். திறந்துவைக்கப்பட்ட ஜீப்கார் கழகக் கொடிகளாலும், வண்ணக் காகிதக் கொடிகளாலும் நன்கு அழகு படுத்தப்பட்டு ஊர்வலத்தின் இறுதிப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது. சாலையை ஒழுங்குபடுத்தித்தர ஏராளமான போலீஸ்காரர்கள் ஊர்வலத்தின் முன்பும், பக்கத்திலும் வரிசையாக இருந்தனர்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுமார் மாலை 4 மணிக்கு வந்து இறங்கினார்கள். குழுமியிருந்த மக்கள் பெருத்த ஆரவாரம் செய்து வாழ்த்தொலிகள் கிளப்பினர். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பலராலும் மாலைகள் சூட்டப்பட்டன. இலங்கை தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. அதி. மணி, தோழர்கள் கதிரவன். பீர்முகம்மது, தம்பித்துரை மற்றும் பல உறுப்பினர்கள் தோழர் நெடுஞ்செழியனை வரவேற்று கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றனர். கட்டிடத்தைப் பார்வையிட்டபின் ஊர்வலம் துவக்கமாயிற்று.

ஊர்வலம் துவங்கும் போது ஏராளமான அதிர்வேட்டுகளும், சீன வெடிகளும் முழங்கின. ஜீப் காரில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், இரா. அதி. மணி, கதிரவன் ஆகியோர் அமர, ஊர்வலம் புறப்பட்டது. சுமார் 4,000-க்கு மேற்பட்ட மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து கழகத் தோழர்களும், கழகத்திடத்துப் பற்றுக்கொண்டோரும் ஆவலோடு வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் சுமார் இரண்டு பர்லாங் நீட்டத்திற்கு வாழ்த்தொலிகள் முழங்க, ஆங்காங்கு அதிர்வேட்டுகள் கிளம்ப, கழகக் கொடிகள் உயர்ந்து காற்றில் பறந்தாட, ஏந்திய கொள்கைத் தட்டிகள் அசைய மக்கட் கூட்டத்தின் நெருக்கம் மிக, ஊர்வலம் மெதுவாக நகர்ந்தது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தோழர் இரா. நெடுஞ்செழியன் யாவரும் எளிதாகப் பார்க்கும் நிலையில் ஜீப் காரில் எழுந்து நின்று கொண்டார். ஊர்வலம் போக வேண்டிய தொலைவு சுமார் 2 மைல் இருந்தது. இந்தியாவிலிருந்து சென்று வாழும் வியாபாரிகளும், கழகத் தோழர்களும், தமிழன்பர்களும் கடைக்குக் கடை ஜீப்காரை நிறுத்தித் தோழர் நெடுஞ்செழியனுக்கும் இரா. அதி. மணி, கதிரவன் ஆகியோர்க்கும் மலர் மாலைகள் சூட்டினார்கள். மக்கள் சூட்டிய நூற்றுக்கணக்கான மாலைகள் ஜீப்காரில் பெரும் போரெனக் குவிந்து, உட்கார்ந்திருப்பவர்களை மறைப்பனவாக இருந்தன.

ஊர்வலம் சுமார் 5-30 மணிக்கு ஸ்கின்னர்ஸ் ரோடிலுள்ள பொதுக்கூட்ட மண்டபத்தைப் போய்ச் சேர்ந்தது. ஊர்வலம் வந்து சேர்வதற்கு முன்னாலேயே ஏராளமான மக்கள் மண்டபம் முழுவதும் நிறைந்து, வெளியேயும் தேங்கி நின்றனர். தோழர் நெடுஞ்செழியன் அவர்களைக் கழகப் பொறுப்பாளர்கள் அழைத்துவர, அவர் மண்டபத்தில் நுழையும் போது மக்கள் ஆரவாரித்துக் கையொலி எழுப்பி, வாழ்த்தொலி கிளப்பினர். சுமார் பதினையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மண்டபத்தின் உள்ளும்புறமும் நிரம்பியிருந்தனர்.

பொதுக் கூட்டத்திற்குத் தோழர் கதிரவன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தோழர் கதிரவன் உணர்ச்சிமிகுந்ததோர் தலைமையுரை ஆற்றி, இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையை விளக்கிப் பேசினார். பின்னர் தோழர்கள் பீர்முகம்மது, இரா. அதி. மணி ஆகியோர் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி குறித்தும், நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமாக ஆனால் சுருக்கமான முறையில் சொற்பொழிவாற்றினர். கொழும்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆண்டு அறிக்கை படிக்கப்பட்டது. கொழும்பு தி. மு. கழகத்தின் சார்பாக அழகான வரவேற்பு இதழ் ஒன்று தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் படித்தளிக்கப்பட்டது. இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கிளையின் சார்பாக இலங்கை தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. எஸ். எம். கலாநேசன் அவர்கள் தோழர் நெடுஞ்செழியனுக்கு மலர் மாலை அணிவித்தார்கள். அதன் பின்னர், கிராண்ட்பாஸ் கிளை, நீர் கொழும்பு கொச்சிக்கடை கிளை, பொரல்லை கிளை, அவிசாவெல்ல கிளை, இரத்தினபுரி கிளை, இரத்தொட்ட கிளை, சேதவித்த கிளை, கொன்னுப்பிட்டி கிளை, பெ. ..டுக்கொல்லை கிளை, தெமட்டகொட கிளை, மாயாவ (கண்டி) கிளை, திராவிட சமுதாய மன்றம், அழகிரி மன்றம், ஆத்தூர் கிளை ஆகியவற்றின் சார்பாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பெருத்த கைதட்டலுக்கிடையே தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுந்து சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக உணர்ச்சி மிகுந்த, தெளிவு பயக்கும் கருத்து பொதிந்த அரிய சொற்பொழிவாற்றினார். இலங்கையில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தென்னாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், உள்ள ஒற்றுமை - வேற்றுமைகளைப் பற்றியும், அரசியல் துறையில் இரண்டு கழகங்களும் எப்படி எப்படியெல்லாம் வேறுபடுகின்றன என்பதைப் பற்றியும், பொருளாதார—சமூகத் துறைகளில் இரண்டும் எப்படி எப்படியெல்லாம் ஒன்றுபட்டு விளங்குகின்றன என்பது பற்றியும், ஒரு நாட்டைச் சுரண்டுபவர்களுக்கும் அந்நாட்டில் பிழைக்க வந்திருப்பவர்களுக்கும் உள்ள வேறுபாடு பற்றியும், இலங்கையில் மிகச் சொற்பமானவர்களைத் தவிர, எட்டு லட்சத்திற்கு மேற்பட்ட இந்தியர்கள் பத்து, பதினைந்து, இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பே பிழைப்பதற்காகக் குடியேறியவர்களே என்பது பற்றியும், இலங்கையினுடைய நல்வாழ்விலேயே அக்கரை கொண்டு இலங்கை குடிமக்களாக வாழ விரும்புபவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதுதான் நியாயம் என்பது பற்றியும், பிழைக்க வந்து இலங்கையைச் செழிக்கச் செய்தவர்களை விரட்டியடிப்பது நியாயமாகாது என்பது பற்றியும், எட்டு லட்சம் இந்தியர்களையும் தாங்கிக் கொள்ளும் வளம் பெற்றதுதான் இலங்கை என்பது பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள், கொள்கை, திட்டம் ஆகியவை பற்றியும், ஏன் திராவிட நாடு பிரிவினை கோரப்படுகிறது என்பதுபற்றியும், தி. மு. கழகத்தின் பொருளாதாரத் திட்டம் எப்படி எல்லோருக்கும் சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற அடிப்படையில் அமைக்கிறது என்பது பற்றியும், சமூகச் சீர்திருத்தக் கொள்கைகள் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் பேசினார். இறுதியில் பல தோழர்களால் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்குத் தக்க முறையில் விடையிறுத்தார். தலைவர் முடிவுரைக்குப் பின் கழகத் தோழர் ஒருவர் நன்றிகூறக் கூட்டம் வாழ்த்தொலிகளோடு இனிது முடிந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றித் தவறாகக் கருதிக் கொண்டிருந்த பலரும் தங்கள் கருத்துக்களைத் திருத்திக் கொள்ளும் அளவுக்கு இக்கூட்டம் தெளிவுபயப்பதாக இருந்தது. இந்தக் கூட்டம், கழகத் தோழர்களுக்குப் புதியதொரு ஊக்கத்தையும், உணர்ச்சியையும் கொடுப்பதாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

### 'சுதந்திரன்' ஆசிரியரின் விருந்து

பொதுக்கூட்டம் முடிந்தவுடன் "சுதந்திரன்" வார இதழ் ஆசிரியர் தோழர் எஸ். டி. சிவநாயகம் அவர்கள் தம் இல்லத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இனிய விருந்தொன்றளித்தார்கள். விருந்தில் தோழர்கள் வித்துவான் வ. மு. கனகசுந்தரம், எஸ். சேதுராமன், தம்பித்துரை, வேலாயுதம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். விருந்து முடிந்த பின்னர் சிறிது நேரம் அளவளாவியிருந்துவிட்டு, ஓய்வு எடுக்க கிரீன்லாண்ட்ஸ் ஹோட்டலுக்குத் தோழர் இரா. நெடுஞ்செழியன் சென்றார்.

### மந்திரி சர். கந்தையா வைத்தியநாதன் சந்திப்பு

இலங்கை அமைச்சர் ஸர். கந்தையா வைத்தியநாதன் அவர்களை தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 25—10—54ம் நாள் காலை, அமைச்சர் இல்லத்தில் சந்தித்து சுமார் அரை மணி நேரம் அளவளாவினார். நாட்டு நடப்புகளைப் பற்றி நட்புறவு முறையில் இருவரும் பேசியிருந்தனர். தோழர் நெடுஞ்செழியன் அவர்களுடன் தோழர்கள் வ. மு. கனகசுந்தரம் அவர்களும், தோழர் எஸ். சேதுராமன் அவர்களும் சென்றிருந்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைத் திட்டங்களைப் பற்றி அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

### புகாரி ஹோட்டல் விருந்து

25—10—54ம் நாள் நண்பகலில் கொழும்பிலுள்ள புகாரி ஹோட்டல் உரிமையாளர்களான இரு இளைஞர்கள் தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்குப் புகாரி ஹோட்டலில் விருந்து ஒன்று அளித்தார்கள்

விருந்திற்கு இலங்கை தி. மு. க. தலைமைக் கிளையின் பொறுப்பாளர்களும், கொழும்பு தி. மு. க. கிளைப் பொறுப்பாளர்களும், பிற நண்பர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். விருந்து மிகச் சிறப்பான முறையிலும், உயர்வான முறையிலும், இனிமையாகவும் அமைந்திருந்தது.

விருந்து முடிந்த பின்னர், தோழர் நெடுஞ்செழியன், கழகத் தோழர்கள், புகாரி ஹோட்டல் உரிமையாளர்கள் அடங்கிய நிழற்படம் ஒன்று எடுக்கப்பட்டது.

### நுககொடை தமிழ் வளர்ச்சிக் கழகப் பொதுக்கூட்டம்

25—10—54ம் நாள் மாலை 4-மணிக்கு நுககொடை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சிறப்புப் பொதுக் கூட்டம் நுககொடை செயின்ட் ஜோஸப் கல்லூரி மண்டபத்தில் தோழர் ஆகவரத்தினராசா பி. எ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழியர் விஜயலட்சுமி சண்முகம் பிள்ளை அவர்கள் இனிய இசையரங்கு ஒன்று நடத்தினார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின் நாவலியூர் தோழர் சோ. நடராசன் அவர்கள், நுககொடை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு வாழ்த்துப்பா மடல் ஒன்று படித்தளித்தார்.

தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் "அச்சம்" என்னும் பொருள் பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரை கூறச் செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

### இலங்கை தி. மு. கழகப் பொறுப்பாளர் கூட்டம்

இலங்கை தி. மு. கழகத்தின் பல்வேறு கிளைகளைச் சார்ந்த பிரதிநிதிகள், பொறுப்பாளர்கள் ஆகியோர் அடங்கிய தனிச் சிறப்புக் கூட்டம், கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் 25—10—54ம் நாள் மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

முதலில், இலங்கை தி. மு. கழகத்தின் சார்பாக தேனீர் விருந்து ஒன்று தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், கழகப் பிரதிநிதிகளுக்கும் அளிக்கப்பட்டது. தனி அழைப்பின் பேரில் தோழர்கள் சிவநாயகம், வேலாயுதம், எஸ். சேதுராமன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பிரதிநிதிகள்—பொறுப்பாளர்கள் அடங்கிய கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, தி. மு. கழகத்தை அமைக்கும் விதம் பற்றியும், செய்யவேண்டிய செயல்கள் பற்றியும், கழகத் தோழர்கள் கடைபிடிக்கவேண்டிய கடமைகள் பற்றியும் அறிவுரை கூறினார். தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் விருப்பத்திற்கிணங்க பல்வேறு கிளைக் கழகங்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் அந்தந்த கிளைக் கழகங்களின் நடவடிக்கைகளைப் பற்றி எடுத்துக் கூறினர். இறுதியாகத் தோழர் இரா. நெடுஞ்செழியன், இலங்கை தி. மு. கழக தலைமைக் கிளை, கொழும்பு தி. மு. கழகம், மற்றும் பல தி. மு. கழகங்கள் ஆற்றிவரும் செயல்களையும், கழகத் தோழர்களின் ஆர்வத்தையும் பாராட்டிப் பேசித், தம்மைப் பெரிதும் சிறப்புறச் செய்து போற்றியதற்காக எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் கிராண்ட்பாஸ் தி. மு. கழகக் கட்டிடத்தையும், கொழும்பு தி. மு. கழகக் கட்டிடத்தையும் பார்வையிட்டார்.

### கழகத் தோழர்கள் விருந்து

கொழும்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர் தம்பித்துரை அவர்களும், பிற தோழர்களும் சேர்ந்து 26—10—54-ம் நாள் நண்பகலில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இனிய விருந்தொன்றளித்தார்கள்.

### இலங்கை தி. மு. க. தலைமை நிலையத்தைப் பார்வையிடல்

26—10—54-ம் நாள் நண்பகல் 3 மணிக்கு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இலங்கை தி. மு. கழகத் தலைமை நிலையத்தைப் பார்வையிடுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டார். தோழர்கள் இரா. அதி. மணி, கதிரவன், பீர்முகம்மது, கலாநேசன் முதலியோர் தோழர் நெடுஞ்செழியனை வரவேற்று நிலையத்தைப் பார்வையிடச் செய்தனர். தோழர் நெடுஞ்செழியன் கழகத்தின் நடவடிக்கைப் புத்தகங்களையெல்லாம் பார்வையிட்டுக் கழக நிர்வாகிகளைப் பாராட்டினார்.

பின்னர் தோழர் நெடுஞ்செழியனும் தலைமைக் கழக நிர்வாகிகளும் அடங்கிய நிழற்படம் ஒன்று எடுக்கப்பட்டது.

### எஸ். எஸ். தொண்டமான் சந்திப்பு

இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் தலைவர் எஸ். எஸ். தொண்டமான் அவர்களும், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் 26—10—54-ம் நாள் மாலை 7 மணியளவில் முக்கியமான

(4-ம் பக்கம் பார்க்க)

# மத வெறி கழகத்தினர் மீது எகிப்தின் நடவடிக்கை

## பாக். மதவாதிகள் எதிர்க்கின்றனர்

கராச்சி, டிச. 4—

எகிப்தில், சர்க்காருக்கு எதிராக சதி செய்தனர் என்று குற்றம் சாட்டி முஸ்லிம் சகோதர உறவுக் கழகத்தைக் கலைத்தது சரியல்ல என்று பாகிஸ்தானில் உள்ள மத வாதிகள் பலர் கண்டித்துள்ளனர்.

முஸ்லிம் உறவுக் கழகத்தின் மீது எகிப்து சர்க்கார் கொண்டுள்ள துவேஷ மனப்பான்மை பற்றி பாகிஸ்தானில் உள்ள ஒன்பது அரசியல், மத இயக்கங்கள் எகிப்து சர்க்காரை எச்சரித்திருக்கின்றன.

எகிப்து சர்க்கார் முஸ்லிம் சகோதர உறவுக் கழகத்தின்மீது கொண்டுள்ள போக்கை மாற்று விட்டால் உலக முஸ்லிம்கள் சர்க்காரின் கொடுமைகளை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபையை அணுக வேண்டியிருக்கும் என்று அந்த இயக்கங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்த எச்சரிக்கையில் கையெழுத்திட்டுள்ளவர்கள், பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலிடம் தூது சென்று, எகிப்து சர்க்காருக்கு தங்கள் கருத்தினைத் தெரிவிக்கும்படி கோருவதென முடிவு செய்தனர்.

உலக முஸ்லிம் மாநாட்டினர், முஸ்லிம் லீக், முஸ்லிம் உறவுக் கழகம், கராச்சி வழக்கறிஞர்கள் சங்கம், ஜமீயத்-உல்-உலிமா இஸ்லாம் ஆகிய பாகிஸ்தான் மத இயக்கங்கள் இந்த எச்சரிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

### டமாஸ்கஸ் எதிர்க்கிறது

சிரியப் பாராளுமன்றத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும், எகிப்திய முஸ்லிம் சகோதர உறவுக் கழகத்தினர் மீது விதிக்கப்பட்ட தண்டனைகளை எதிர்த்துள்ளன. மரண தண்டனை விதித்துள்ளதை அவர்கள் கண்டித்துள்ளனர்.

இவர்களில் முக்கியமானவர் ஒருவர், "எகிப்தின் நலனைப் பாதுகாக்கவும், அரபுகளின் நன்மையை உத்தேசித்தும், சிரிய சர்க்கார், இப்பிரச்சினையில் தலையிட வேண்டும்," என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

### மரண தண்டனை - ஆயுள் தண்டனையாகிறது!

கெய்ரோ, டிச. 5—

எகிப்து சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, எகிப்திய இராணுவ நீதி மன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ கழகத்தின் தலைவர் ஹாஸன் எல்ஹோடிபி தமது மரண தண்டனையிலிருந்தும் தப்பினார்; எகிப்து புரட்சிக் கவுன்சில், அவரது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து விட்டிருக்கிறது. ஆனால், இது சம்மந்தப்பட்ட மற்றவர்களின் மரண தண்டனைகளை, இக்கவுன்சில் உறுதிப்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## சலுகை - கிடையாதாம்!

சேலம், டிச. 2—

இங்கிருந்து கல்கத்தாவிற்கு மூன்று இரயில் 'வாகன்'கள் நிறைய அனுப்பப்பட்ட சவ்வரிசியை (மரவள்ளிக் கிழங்கின் மணிகள்) 'டெலிவரி' கொடுக்க இரயில்வே அதிகாரிகள் மறுத்து விட்டிருக்கின்றனர்.

பொய்யான தகவல்களைக் கொடுத்ததாக அவர்கள் காரணம் கூறுவதாகச் சொல்லப்படுகிறது.

இதுவரையில், இரயில் மூலமாகக் குறைந்த செலவில் சவ்வரிசி அனுப்பப்பட்டு வந்தது. கல்கத்தா நகர சபையின் நடவடிக்கை காரணமாக இரயில்வே அதிகாரிகள் கூடுதல் கட்டணம் கேட்கின்றனரெனவும், குறைந்த கட்டணச் சலுகை மரவள்ளிக் கிழங்குக்குக் கிடையாதென்று கூறுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஏற்கனவே, ஏழு இரயில் 'வாகன்'கள் நிறைய அனுப்பப்பட்ட மரவள்ளிக்கிழங்குமணிகளுக்கும் 'டெலிவரி' மறுக்கப்படுமெனவும் இங்குள்ளவர்கள் சந்தேகிக்கின்றனரெனவும் தெரிகிறது.

சேலத்திலுள்ள சவ்வரிசி வியாபாரிகள் சங்கத்தார், கல்கத்தா நகர சபையின் இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து தலைமை உயர்நீதி மன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்) செய்து கொண்டுள்ள மனு ஒன்று, இத்திங்கள் 7-ந் தேதியன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படுமெனவும் கூறப்படுகிறது.

கடந்த 3 நாட்களில், மலபார் கிழங்கு 6 லாரிகள்தான் வந்துள்ளன என்றும், அந்தக் கிழங்கு, மணங்கொன்றுக்கு 14 அணா வீதம் விற்கப்படுகிறதாகவும், முதல் ரக சவ்வரிசி ரூ. 38—39 ஆகவும், இரண்டாம் ரக சவ்வரிசி ரூ. 35—36 ஆகவும் விற்கப்படுகிறதெனவும் தெரிய வந்துள்ளது.

## அந்தமானில் குடியேற்றம்

அந்தமான் தீவுகளில், 1948-ம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் மொத்தம் 3,666 பேர் குடியேறியுள்ளனர் என்றும், அனுப்பப்பட்டவர்களில் சுமார் ஆயிரம் பேர், அங்குள்ள வாழ்க்கை நிலைக்குத் தங்களைச் சரிக்கட்டிக் கொள்ள இயலாமல் திரும்பிவிட்டனர் என்றும், டெல்லி மக்கள் சபையில் உதவி உள்நாட்டமைச்சர் தத்தார் தெரிவித்திருக்கிறார்.

திரு-கொச்சி மாநிலத்திலிருந்து சிலர் அனுப்பப்பட்டுள்ளனரெனவும், சென்னை, பம்பாய் மாநிலங்களிலிருந்தும் கொஞ்சம் பேர் அனுப்பப்படலாமெனவும், இன்னும் 5 ஆண்டுகளில் 4,000 குடும்பங்களை அந்தமான் தீவுகளில் குடியேற்றுவதென உத்தேசித்துள்ளதாகவும் அவர், மேலும் கூறியிருக்கிறார்.

## வெந்து மாண்டனர்!

இரு சகோதரருக்கிடையே ஏற்பட்ட தகராறுகளின் காரணமாக, ஒரு குடும்பமே தீக்கிரையாகி வெந்து சாம்பலான சம்பவம் ஒன்று ஐதராபாத் மாநிலத்தில் நடைபெற்றிருக்கிறது.

நாதேத் எனும் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில் உள்ள ஒருவர், தமது சகோதரருக்கு எதிராகப் பில்லி சூனியங்கள் சில செய்துவந்ததாகவும்; இதைப் பொறாத அவர், தமது சகோதரர் மேல் ஆத்திரங்கொண்டு, இத்திங்கள் முதல் தேதியன்று இரவு அவரது வீட்டிற்கு தீயிட்டிருக்கிறார். குடிசையினுள்ளே தூங்கிக் கொண்டிருந்த 5 பேரும் வெந்து சாம்பலாகிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இது விஷயமாகப் போலீசார் நான்கு நபர்களைக் கைது செய்துள்ளனராம்.

## புதிய பொறுப்பு!

பெர்லின்—

ஜெர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்குவது பற்றிய ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, வெளிநாட்டு விவகார இலாகா பொறுப்பைத் தாம் விட்டுவிட்டு, பாதுகாப்பு விஷயங்களில் கவனம் செலுத்தப் போவதாக மேற்கு ஜெர்மானியப் பிரதமர் அடினார் கூறியிருக்கிறார்.

## 'கல்கி' காலமானார்

சென்னை, டிச. 5—

'கல்கி' வார இதழின் ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) இன்று காலை சுமார் 4-45 மணிக்கு அடையாரில் உள்ள தமது இல்லத்தில் காலமானார் என்பதறிந்து மிக வருந்துகிறோம்.

அவர் சின்னாட்களாகவே நோய் வாய்ப்பட்டிருந்தார் என்றாலும், இரண்டொரு தினங்களுக்கு முன்பு குணமாகி வருகிறார் என்று கூறப்பட்டது: ஆனால் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு காலமானார் எனத் தெரிகிறது.

'கல்கி', தஞ்சை மாவட்டம் மாயவரத்திற்கருகில் உள்ள புத்தமங்கலம் எனும் கிராமத்தில் 1899-ம் ஆண்டு பிறந்தவர். 'இன்டர்மீடியட்' வகுப்புவரை கல்வி பயின்றார். 1921-ல் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றபோது அதில் தீவிர பங்கேற்றார்.

பெரியார் இராமசாமி அவர்கள் தலைமையில் காங்கிரஸ் காரியாலயத்தில் பணியாற்றியிருக்கிறார், திரு. 'கல்கி'.

அவர், ஆச்சாரியார் தலைமையிலும் காங்கிரசில் பணிபுரிந்ததுண்டு.

திரு. வி. க. நடத்திய 'நவ. சக்தி' எனும் பத்திரிகையில்தான் முதன் முதலில் எழுத்தாளராகப் பயிற்சி பெற்றார். அங்கு ஆறு வருட காலம் பயின்ற பின், திருச்செங்கோட்டில் உள்ள ஆசிரமத்தில் ஆறாண்டுக் காலம் 'தேசிய சேவை'யிலீடுபட்டிருந்து விட்டு பின்னர் 'விமோசனம்' எனும் பத்திரிகையில் ஒரு வருடம் ஆசிரியராயிருந்து, பின்னர், 'ஆனந்த விகடனி'ல் ஆசிரியர் குழாமில் ஒருவராகி, வாசன்கீழ் பணியாற்றினார்.

பின்னர், தான், தனியாக 'கல்கி' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை 1941-ல் துவங்கி நடத்திவந்தார். அவர், 1927, 1930, 1940 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற காங்கிரஸ் இயக்கத்தில் பங்குபெற்று சிறை சென்றவரும்கூட.

தமிழில் நிறைய நாவல்களும் நவீனங்களும், சிறு கதைகளும் எழுதியுள்ளார்.

அவருக்கு, மனைவி, தாயார், ஒரு புதல்வர், ஒரு பெண், இரு சகோதர சகோதரிகள் உண்டு.

## பம்பாய் கவர்னர் காலமானார்

பம்பாய், டிச. 5—

பம்பாய் மாநில கவர்னர் கிரிஜா சங்கர் பாஜ்பாய், நேற்றிரவு 2½ மணி சுமாருக்குக் காலமானார்.

சென்ற சில காலந்தொட்டே அவர் நோய்வாய் பட்டிருந்ததாகவும், மூளையிலுள்ள இரத்தக் குழாய் வெடித்ததால்தான் அவர் உயிர் துறந்தார் எனவும் கூறப்படுகிறது. இவருக்கு வயது 63 ஆகிறது.

★

### தற்காலிக கவர்னர் நியமனம்

பம்பாய் கவர்னர் பாஜ்பாய் காலமானதையொட்டி, பம்பாய் மாநில தற்காலிக (ஆக்டிங்) கவர்னராக, முன்னாளில் மத்திய பிரதேச கவர்னராக இருந்த மங்கள தாஸ் எம். பக்வாஸா, பம்பாய் பிரதம நீதிபதி முன்னிலையில் பதவி ஏற்று விசுவாசப் பிரமாணம் செய்துகொண்டார். இவர், ஏற்கனவே சிலகாலமாகப் பம்பாய் மாநில கவர்னராக இருந்து பணியாற்றியும் இருக்கிறார்.

ஈரான்—சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளிடையே நிலவிவந்த பொருளாதார, எல்லைப்புற கருத்து வேறுபாடுகளுக்கு முடிவு கூறும் ஒப்பந்தம் ஒன்று இரு நாடுகளிடையேயும் கையெழுத்தாகியுள்ளது எனத் தெரிகிறது.

## தோழர் தங்கப்பழம்

★

டிச. 10, 11, 12, 13 தேதிகளில் பம்பாய், சயன், காந்தவல்லி தி. மு. கழக ஆண்டு விழாக்களிலும், பொதுக்கூட்டங்களிலும் கலந்துகொள்வார்.

### பொதுக்கூட்டம்

7-12-54 மாலை 6 மணிக்கு, சென்னை, எழும்பூர், வீராசாமி பிள்ளைத் தெருவில், 32-வது வட்ட அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில், தோழர் டி. வேணுகோபால் ராவ் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., டி.என்.இராவணன் ஆகியோர் பேசுவர்.

## "தினமணி"யின் இழிகுணம்

★

'தினமணி', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 3—12—54 நாள் இதழில், நான் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டதாக வெளியாகிய செய்தி கலப்பற்ற பொய். இந்த இழிகுணத்திற்கு வருந்தி, பொய்ச் செய்தி வெளியிட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நான், காங்கிரசில் சேர்ந்துவிட்டதாக வந்த செய்தி தவறானது. இத்தவறை மேற்படி பத்திரிகைகளுக்கும் மறுப்பு எழுதி இருக்கிறேன் என்பதை, என்பால் நம்பிக்கை கொண்டுள்ள நண்பர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஏ. கோவிந்தசாமி,
எம். எல்.ஏ.

## போலீசார் சுட்டதில் 8 பேர் பலி!

ராஜகோட்டை—

இங்குள்ள ஒரு கிராமத்தில், இரு கட்சியினரிடையே ஏற்பட்ட சச்சரவைத் தீர்த்துவைக்கச் சென்ற போலீசார், தற்காப்பிற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், பெண்கள் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர் என்ற செய்தியொன்று வெளியாகியிருக்கிறது.

சென்ற 2-ந் தேதி யன்று இரவு ஒரு பெண் சம்பந்தமாக, தின்குவாலியா என்ற அந்தக் கிராமத்திலுள்ள இருகட்சியினரிடையே சச்சரவேற்பட்டதாகவும், இதுபற்றி விசாரித்து, சச்சரவைத் தீர்த்து வைக்கச் சென்ற போலீசாரை அக்கிராம மக்கள் அடித்துத் துரத்தினதாகவும், இத்தகவல் கேட்ட மற்றொரு போலீஸ் குழு, துரத்தியடிக்கப்பட்ட போலீசாருக்கு உதவிக்காகச் சென்றவிடத்தில், கிராமத்தவர், இவர்களையும் தாக்கினர் எனவும், உடனே போலீசார் தங்கள் தற்காப்பிற்காக துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினர் என்றும் கூறப்படுகிறது.

## பார்மோசா நிலைமை

தைப்பே, டிச. 5—

அமெரிக்காவுக்கும் சியாங் சர்க்காருக்குமிடையே ஏற்பட்ட பரஸ்பர உதவி ஒப்பந்தத்தின் காரணமாக அமெரிக்கக் கடற்படையும் விமானப் படையும் பார்மோசா தீவுக்கு அனுப்பப்படலாமென கூறப்படுகிறது. அமெரிக்காவின் தூரக்கிழக்கு விமானப்படையும் அங்கு அனுப்பப்படலாம் என்று நம்பப்படுகிறது.

* * *

"சீனக் கடற்கரையை முற்றுகையிடுவது உட்பட எல்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அமெரிக்கக் கடற்படை போதிய பலம் வாய்ந்ததாக இருக்கிறது," என்று அமெரிக்கக் கடற்படை அமைச்சர் கூறியிருக்கிறார். என்றாலும், சீனக் கடற்கரையை முற்றுகையிடுவது சம்பந்தப்பட்டவைகளை ஜனாதிபதி ஐசனோவரும், ராஜாங்க மந்திரி டல்லசுமே முடிவு செய்ய வேண்டுமென்றும் அவர் மேலும் தமது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

## கொழும்பு தி. மு. கழக..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹோட்டல் ஒன்றில் சந்தித்து அளவளாவினர். இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் நிலைமை பற்றித் தோழர் இரா. நெடுஞ்செழியன் தொண்டமானோடு அளவளாவினார்.

தோழர் தொண்டமான் அவர்கள் தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்குக் கொழும்பு சீனர் ஹோட்டலில் இரவு விருந்து ஒன்று அளித்தார். அதற்குப் பல நண்பர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

விருந்து முடிந்த பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடைபெற்றுக்கொண்டு, ஓய்வு எடுக்க கிரீன்லாண்ட்ஸ் ஹோட்டலுக்குச் சென்றார்.

### தமிழரசுக் கழகத் தலைவர் சந்திப்பு

27—10—54-ம் நாள் மாலை 6 மணிக்கு இலங்கை தமிழரசுக் கழகத் தலைவர் தோழர் செல்வநாயகம் அவர்கள் தம் இல்லத்தில் தோழர்இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்குத் தேனீர் விருந்து ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்.

இலங்கைத் தமிழர்கள் நிலை, இந்தியர்கள் நிலை, அரசியல் நிலை, மொழிக்கிளர்ச்சி, மாகாணப் பிரிவினை கிளர்ச்சி பற்றி தனிப்பட்ட முறையில் இருவரும் அளவளாவினர்.

இலங்கைத் தமிழரசுக் கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் நட்புறவு ஏற்படுகிற வகையில் நெருங்கிய கொள்கை ஒற்றுமை உண்டு.

தேனீர் விருந்திற்குப் பின் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடைபெற்றுக்கொண்டு கொழும்பு வானொலி நிலையம் சென்றார்.

27—10—54ம் நாள் இரவு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் "கலித்தொகையில் இரண்டு காட்சிகள்" என்னும் பேச்சு பதிவு செய்யப்பட்டது. இது இன்னும் இரண்டொரு திங்களில் ஒலி பரப்பப்படும்.

### வழியனுப்பு

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 28—10—54ம் நாள் காலை 7 மணிக்கு ஏர்சிலோன் விமானத்தின் மூலம் சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் இரா. அதி. மணி, கதிரவன், தம்பித்துரை, பீர்முகம்மது, கலாநேசன் மற்றும் பல கழகத் தோழர்களும், கொழும்பு தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் சோ. நடராசன், பொதுச்செயலாளர் வித்துவான் வ. மு. சனகசுந்தரம், மற்றும் பல உறுப்பினர்கள் ஆகியோரும், நண்பர்கள் எஸ். சேதுராமன், ஆதி சுருப்பையா, மாணிக்கம், சீனு, கிரீன்லாண்ட்ஸ் ஹோட்டல் உரிமையாளர், "சுதந்திரன்" ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், வேலாயுதம் ஆகியோரும் மற்றும் ஏராளமான தோழர்களும் விமான நிலையம் வந்து, தோழர் இரா. நெடுஞ்செழியனுக்கு மலர்மாலைகள் அணிவித்து, வாழ்த்தொலி முழக்கி வழியனுப்பினர்.

## சதி செய்தவர் கதி!

இரங்கூன், டிச. 4—

பர்மா சர்க்காரைக் கவிழ்க்கத் திட்டமிட்டு, தளபதியான ஜெனரல் நீ-வின்னின் ஆதரவை நாடியதாக, பர்மிய முன்னாள் அமைச்சர் பாபவே என்பவரும், வர்த்தகப் பிரமுகரான மாங் என்பவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (34, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.